# A

**18733** **120 MINUTES**

1. 'ஏமம்' என்பதன் பொருள் என்ன?
   A) துன்பம் B) இரவு C) இன்பம் D) பகல்

2. ஆராய்ந்தெழுதுக
   1. குறுந்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
   2. குறுந்தொகை நானூறு பாடல்களைக் கொண்டது
   3. குறுந்தொகைப் பாடல்களைத் தொகுத்தவர் பூரிக்கோ என்பவர்
   4. குறுந்தொகைப் பாடல்கள் அகவற்பாவால் அமைந்தவை

   A) 1,2 சரி B) 1,2,3, சரி C) 2,3,4 சரி D) அனைத்தும் சரி

3. "புன்கால் உன்னத்துப் பகைவன் எம் கோ" என்னும் சொற்றொடர் இடம்பெறும் நூல் எது?
   A) பதிற்றுப்பத்து B) நெடுநல்வாடை
   C) குறிஞ்சிப்பாட்டு D) குறுந்தொகை

4. பொருத்துக
   a. இன்னது மன்னோ நல்நுதல் கவினே — 1. குறிஞ்சிப்பாட்டு
   b. கூந்தல் மகளிர் கோதை புனையார் — 2. பதிற்றுப்பத்து
   c. நட்டோர்க்கு அல்லது கண் அஞ்சலையே — 3. குறுந்தொகை
   d. செப்பல் ஆன்றிசின் சினவாதீமோ — 4. நெடுநல்வாடை

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 3 |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 1 | 2 | 4 | 3 |

5. ஆராய்ந்தெழுதுக
   1. பத்துப்பாட்டில் மிக நீண்ட பாட்டு நெடுநல்வாடை
   2. நெடுநல்வாடை அகம், புறம் என்னும் இரண்டு நிலைகளில் கருதப்படுகின்றது
   3. நெடுநல்வாடையைப் பாடியவர் கபிலர்
   4. நெடுநல்வாடையில் கூதிர்கால வருணனை மிகச் சிறப்பாக அமைந்துள்ளது

   A) 2,4 சரி B) 1,3 சரி C) 1,4 சரி D) 1,2,3 சரி

6. “கௌவை அஞ்சின் காமம் எய்க்கும்” என்னும் கூற்று எந்தச் சூழ்நிலையில் கூறியது?

A) உடன்போக்கியபோது B) பருவம்கண்டு அழிந்தபோது

C) வரைவு நீட்டித்தபோது D) வாயில் நேர்ந்தபோது

7. ஆராய்ந்தெழுதுக

1. திருக்குறள் 130 அதிகாரங்களைக்கொண்டது
2. திருக்குறளுக்கு நாற்பால் என்ற பெயரும் உண்டு
3. திருக்குறளில் அகப்பொருள், புறப்பொருள் பற்றிய செய்திகள் உள்ளன
4. திருக்குறள் ‘அ’ என்ற உயிரில் தொடங்கி ‘ன்’ என்ற மெய்யில் நிறைவுபெறுகிறது.

A) 1,2 சரி B) 3,4 சரி C) 2,4 சரி D) 2.3.4 சரி

8. புள்ளானும் நான்முகனும்’ என்பதில் புள்ளான் யாரைக் குறிக்கின்றது?

A) முருகன் B) பிரம்மன் C) சிவன் D) திருமால்

9. ஆராய்ந்தெழுதுக

1. சிலப்பதிகாரம் கடவுள் வாழ்த்தாக இயற்கையை வாழ்த்துகிறது
2. சிலப்பதிகாரம் மூன்று காதைகளால் ஆனது
3. ஐம்பெரும் காப்பியங்களுள் தனித்தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரம்
4. சிலப்பதிகாரம் கி.பி. முதல்நூற்றாண்டைச் சார்ந்தது என்பது பெரும்பான்மையோர் கருத்து

A) 1,3 சரி B) 1,4 சரி C) 3,4 சரி D) அனைத்தும் சரி

10. பொருத்துக

a. என்காற் சிலம்பு மணியுடை அரியே 1. வாயிற்காவலன்
b. கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல் 2. பாண்டியமன்னன்
c. யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே 3. கோப்பெருந்தேவி
d. வெற்றிவேல் தடக்கை கொற்றவை அல்லள் 4. கண்ணகி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 3 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 3 | 1 | 4 | 2 |

11. ஆராய்ந்தெழுதுக

1. பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர் அப்பர்
2. அப்பர் என்னும் பெயர் திருநாவுக்கரசரைக் குறிக்கும்
3. பன்னிரு திருமுறைகளில் அப்பர் தேவாரம் பத்தாம் திருமுறையாகும்
4. அப்பர் முதலில் சமண சமயத்தைச் சார்ந்து வாழ்ந்தார்

A) 1,3 சரி B) 2,4 சரி C) 1,4 சரி D) 3,4 சரி

12. 'கனிவாய் மடமயில்' என்பது யாரைக் குறிக்கிறது?

A) கண்ணகி B) ஆண்டாள் C) கதீஜா D) அன்னை மேரி

13. சரியான காலவரிசை எது?

A) திரிகடுகம். பதிற்றுப்பத்து, கம்பராமாயணம், சிலப்பதிகாரம்

B) பதிற்றுப்பத்து, திரிகடுகம். சிலப்பதிகாரம், கம்பராமாயணம்

C) சிலப்பதிகாரம், பதிற்றுப்பத்து, திரிகடுகம், கம்பராமாயணம்

D) கம்பராமாயணம், சிலப்பதிகாரம் திரிகடுகம், பதிற்றுப்பத்து

14. 'ஏதிலார் போலப் பொதுநோக்கு' எனும் குறளடியில் வரும் ஏதிலார் என்பதன் பொருள் யாது?

A) மன்னவர் B) உறவினர் C) வானவர் D) அயலார்

15. சீறா என்பது 'ஸீரத்' என்னும் அரபுச் சொல்லின் திரிபு. இதன் பொருளென்ன?

A) வாழ்க்கை வரலாறு B) நல்லொழுக்கம்

C) நபிகள் நாயகம் D) பரம்பொருள்

16. ஆராய்ந்தெழுதுக

1. சிறாப்புராணம் நபிகள் நாயகத்தின் வரலாற்றைப் பாடுகிறது
2. இந்நூலை எழுதியவர் உமறுப்புலவர்
3. உமறுப்புலவரை ஆதரித்தவர் வள்ளல் சீதக்காதி
4. சீறாப்புராணம் ஐந்து காண்டங்களை உடையது

A) 1,2 சரி B) 3,4 சரி C) 1,2,3 சரி D) 2,3,4 சரி

17. "வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க, போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்" எனும் அடிகள் இடம்பெறும் நூல் எது?

A) மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் B) திருப்பாவை

C) தேம்பாவணி D) சீறாப்புராணம்

18. தேம்பாவணியில் ஜோஸப் என்னும் பெயர் எவ்வாறு வழங்கப்படுகின்றது?

A) சூசை B) கருணையன் C) நகுலன் D) வளன்

19. பொருத்துக

| | | |
|---|---|---|
| a. | காற்றுக்கு இறைவன் எனைக் காத்தனன் | 1. அனுமன் |
| b. | உன்னிய எல்லாம் முற்றும் உனக்கும் முற்றாதது உண்டோ | 2. மைந்நாகமலை |
| c. | பூரண குடத்து நீர் நறவின் பொங்குமால் | 3. இலங்காதேவி |
| d. | வெல்லுமோ தீவினை அறத்தை மெய்ம்மையால் | 4. திரிசடை |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 2 | 4 | 1 | 3 |
| C) | 1 | 2 | 3 | 4 |

D) 2 3 4 1

20. திரிசடை என்பவள் யார்?

A) இராவணனின் தங்கை B) இராவணனின் மகள்

C) விபீடணனின் மகள் D) கும்பகர்ணனின் மனைவி

21. தேம்பாவணி காப்பியம் எத்தனை காண்டங்களால் ஆனது?

A) 3 B) 4 C) 5 D) 6

22. ஆராய்ந்தெழுதுக

1. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழைப் பாடியவர் தாயுமானவர் சுவாமிகள்
2. இந்நூல் கி. பி. பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்தது
3. தொடுக்கும் கடவுள் பழம்பாடல்' என்னும் பாடல் இந்நூலில் இடம்பெறுகின்றது
4. மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் பாண்டியன் அவையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது

A) 2,3 சரி B) 3,4 சரி C) 1,2,3 சரி D) அனைத்தும் சரி

23. கலிங்கநாடு எந்த நாட்டைக் குறிப்பிடுகின்றது

A) ஆந்திரா B) கர்நாடகம் C) ஒரிசா D) பீகார்

24. ஆராய்ந்தெழுதுக

1. 'திருக்குற்றாலக் குறவஞ்சி' சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று
2. இந்நூலைப் பாடியவர் திரிகூடராசப்பக் கவிராயர்
3. இவர் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்
4. திருக்குற்றாலக் குறவஞ்சி முருகப்பெருமானைப் புகழ்ந்து பாடுகின்றது

A) 1,2,3 சரி B) 2,3,4 சரி C) 2,4 சரி D) 1,3 சரி

25. சரியான அதிகார வரிசை எது?

A) காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது

B) கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, காடு பாடியது

C) தேவியைப் பாடியது, காடு பாடியது, கோயில் பாடியது, பேய்களைப் பாடியது

D) பேய்களைப் பாடியது, தேவியைப் பாடியது, காடு பாடியது, கோயில் பாடியது

26. "காதலை வேண்டிக் கரைகின்றேன், இல்லையெனில்
சாதலைவேண்டித் தவிக்கின்றேன்" எனும் அடிகள் எதில் இடம்பெறுகின்றது?

A) அவ்வை B) தமிழச்சியின் கத்தி

C) குயில்பாட்டு D) ஆலாபனை

27. பொருத்துக

| | | |
|---|---|---|
| a. | நஞ்சும் அஞ்சிலேன், நின் சொல் அஞ்சினேன் | 1. குடிலன் |
| b. | துறந்தார் அறிவரோ தூதின் தன்மை | 2. வாணி |
| c. | நம் அரியணை இருவற்கு இடங்கொடாது | 3. மனோன்மணி |
| d. | காதல் என்பது என்? பூதமோ பேயோ? | 4. புருடோத்தமன் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 1 | 2 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 1 | 3 | 2 | 4 |
| D) | 4 | 1 | 2 | 3 |

28. "தாய்க்கும் ஒளித்த சூலோ தையால்
வாய்க்கும் ஒளித்த உணவோ"- இக்கூற்று இடம்பெறும் நூல் எது?

A) குற்றாலக்குறவஞ்சி B) குயில் பாட்டு
C) தமிழச்சியின் கத்தி D) மனோன்மணீயம்

29. கீழ்வரும் புலவர்களின் சரியான காலவரிசை எது?

A) குமரகுருபரர், திரிகூடராசப்பக் கவிராயர், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, ஜெயங்கொண்டார்
B) திரிகூடராசப்பக்கவிராயர், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, ஜெயங்கொண்டார், குமரகுருபரர்
C) ஜெயங்கொண்டார், குமரகுருபரர், திரிகூடராசப்பக் கவிராயர், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை
D) பேராசிரியர் சுந்தரம்பிள்ளை,ஜெயங்கொண்டார்,குமரகுருபரர், திரிகூடராசப்பக் கவிராயர்

30. ஆலாபனை என்பதன் பொருள் என்ன?

A) விரிவாகப் பாடுதல் B) கைகூப்பி வணங்குதல்
C) புகழ்ந்து பேசுதல் D) பழிகூறுதல்

31. பொருத்துக

| | | |
|---|---|---|
| a. | அளம் | 1. இன்குலாப் |
| b. | ஆலாபனை | 2. பாரதியார் |
| c. | அவ்வை | 3. அப்துல்ரகுமான் |
| d. | குயில்பாட்டு | 4. தமிழ்செல்வி |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 2 | 4 |
| B) | 1 | 3 | 4 | 2 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 4 | 3 | 1 | 2 |

32. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| a. | நற்காலம் வந்ததடி பெண்ணே, இங்கு நாமென்ன நூறு செலவிட்டோம் | 1. | சுப்பம்மா |
| b. | வெண்ணெய் என்றபிள்ளைக்கு மண்ணையள்ளி உண்ணென்று சாற்றினளே | 2. | செங்கான் |
| c. | குத்துக் கத்திக்கு மெய்யாக வேலையுண்டோ, அவ்வாறொன்றும் விளையாமைவேண்டும் | 3. | திம்மன் |
| d. | அன்றைக்கே யாமறிந்தோம் இவைகள் எல்லாம், அதிகாரிகள் கலந்த செயல்களென்று | 4. | சுதரிசன் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 1 | 3 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 4 | 3 | 2 | 1 |

33. ஆராய்ந்தெழுதுக

1. அக்னிச் சிறகுகள் டாக்டர் ஆ.ப. ஜெ. அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாறு
2. இந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர் திரு. மு. சிவலிங்கம்
3. அக்னிச் சிறகுகள் தமிழ் நூலை வெளியிட்டவர் திரு. காந்தி கண்ணதாசன்
4. இந்நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளைத் தமிழாக்கம் செய்தவர் கவிஞர் புவியரசு

A) 1,3 சரி B) 1,2,3 சரி C) 2,3,4 சரி D) அனைத்தும் சரி

34. காலந்தோறும் பெண் என்ற நூலின் ஆசிரியர்

A) தமிழ்செல்வி B) சிவசங்கரி
C) ராஜம் கிருஷ்ணன் D) சிவகாமி

35. ஆராய்ந்தெழுதுக

1. நந்திக் கலம்பகத்தைப் பாடியவர் ஒட்டக்கூத்தர்
2. பலவகையான பாவும் பாவினங்களும் விரவிவரப் பாடுவது கலம்பகம்.
3. நந்திக் கலம்பகம் நந்திவர்மப் பல்லவனைத் தலைவனாகக்கொண்டு பாடப்பட்டது
4. நந்திக் கலம்பகத்தில் நானூறு பாடல்கள் உள்ளன.

A) 2,3 சரி B) 1,2,3 சரி C) 2,3,4 சரி D) அனைத்தும் சரி

36. குறவஞ்சியில் வரும் வஞ்சி என்பதன் பொருள் என்ன?

A) ஏமாற்று B) மலர்க்கொடி C) பெண் D) ஓடம்

37. "அண்டை மாநிலத்துக்குச் சண்டைகள் போடாமல் போகிறது, இது என் காவிரி" இடம்பெறும் நூல் எது?

A) ஒரு மாமரமும் கொஞ்சம் பறவைகளும் B) ஒரு கிராமத்து நதி
C) தமிழச்சியின் கத்தி D) அக்னிச்சிறகுகள்

38. "மலர்க்குல மாதவிதன்மேல் வண்டார்க்கும் காலம்
வரிக்குயில்கள் மாவில் இளம் தளிர்கோதும் காலம்" இப்பகுதி எங்கு வருகின்றது?
A) அவ்வை B) திருக்குற்றாலக்குறவஞ்சி
C) மனோன்மணீயம் D) நந்திக்கலம்பகம்

39. "விருந்தினரை வரவேற்பான் தமிழன்
விருந்தினர்க்கு நலம் செய்வான் தமிழன்." இடம்பெறும் நூல் எது?
A) குயில்பாட்டு B) அவ்வை
C) அளம் D) தமிழச்சியின் கத்தி

40. கீழ்வரும் நூல்களுள் இன்குலாப்பின் படைப்பு எது?
A) அவ்வை B) அளம் C) ஆலாபனை D) அதியமான்

41. அக்னிச்சிறகுகள் என்ற பெயர் எதன் அடிப்படையில் எழுந்தது?
A) ஏவுகணை B) எரிமலை C) விமானம் D) ஃபீனிக்ஸ் பறவை

42. நுனிநா அண்ணம் வருட எந்தெந்த எழுத்துக்கள் பிறக்கும்?
A) லகார ளகார ஆயிரண்டும் பிறக்கும்
B) பகார மகாரம் பிறக்கும்
C) தகார நகாரம் பிறக்கும்
D) ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்

43. பொருத்துக

| | | |
|---|---|---|
| a. | அ, ஆ | 1. மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும் |
| b. | இ, ஈ, எ, ஏ, ஐ | 2. அங்காந்து இயலும் |
| c. | உ, ஊ, ஒ, ஓ, ஔ | 3. அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய |
| d. | மெல்லெழுத்துக்கள் | 4. இதழ் குவிந்து இயலும் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 4 | 3 | 2 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 2 | 3 | 4 | 1 |
| D) | 3 | 1 | 4 | 2 |

44. பொருத்துக

| | | |
|---|---|---|
| a. | ஒடு | 1. நான்காம் வேற்றுமை |
| b. | கு | 2. மூன்றாம் வேற்றுமை |
| c. | இன் | 3. ஆறாம் வேற்றுமை |
| d. | அது | 4. ஐந்தாம் வேற்றுமை |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 2 | 4 | 1 |
| B) | 2 | 1 | 4 | 3 |

C) 1 2 3 4
D) 4 1 2 3

45. ஆராய்ந்தெழுதுக

1. இயற்பெயர் நான்கு வகைப்படும்
2. சினைப்பெயர் நான்கு வகைப்படும்
3. சினைமுதற்பெயர் மூன்று வகைப்படும்
4. முறைப்பெயர் இரண்டு வகைப்படும்

A) 1,3 சரி B) 2,4 சரி C) 1,2,4 சரி D) 2,3,4 சரி

46. தந்தையர் என்பது எவ்வாறு அமைந்த பெயர்?

A) பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயர்
B) பல்லோர் குறித்த சினைநிலைப் பெயர்
C) பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயர்
D) பன்மை சுட்டிய சினைமுதற் பெயர்

47. ஆராய்ந்தெழுதுக

1. சொல்லெனப்படுப பெயரே வினையென்று ஆயிரண்டென்ப
2. வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது
3. வினைச்சொல் எல்லாம் காலமொடு வரும்
4. காலம் தாமே மூன்றென மொழிப

A) 1,3 சரி B) 2,4 சரி C) 1,2,3 சரி D) அனைத்தும்சரி

48. தீம்புனல் உலகம் என்பது எந்த நிலத்தைக் குறிப்பிடுகின்றது?

A) குறிஞ்சிநிலம் B) முல்லைநிலம்
C) நெய்தல்நிலம் D) மருதநிலம்

49. பொருத்துக (அகத்திணைக்குப் புறனாகும் புறத்திணை)

| | | |
|---|---|---|
| a. | குறிஞ்சி | 1. தும்பை |
| b. | முல்லை | 2. வெட்சி |
| c. | மருதம் | 3. வஞ்சி |
| d. | நெய்தல் | 4. உழிஞை |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 1 | 3 |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 2 | 3 | 4 | 1 |
| D) | 4 | 3 | 2 | 1 |

50. நிலையாமையை உணர்த்தும் புறத்திணை எது?

A) காஞ்சித்திணை B) பாடாண்திணை
C) வாகைத்திணை D) உழிஞைத்திணை

51. ஆராய்ந்தெழுதுக

1. நெய்தல் நிலம் பெருமணல் உலகம் என்றும் அறியப்படுகிறது
2. நெய்தல் நிலத்திற்குரிய காலம் ஏற்பாடு பொழுது
3. இந்திரன் நெய்தல்நிலக் கடவுள் ஆவான்
4. இரங்கல் நெய்தல் திணைக்குரிய உரிப்பொருளாகும்

A) 1,2,4 சரி B) 1,2,3 சரி C) 2,3,4 சரி D) அனைத்தும் சரி

52. கீழ் வருவனவற்றுள் நேரசை அல்லாதது எது?

A) ஆ B) வேல் C) சுறா D) கல்

53. பொருத்துக

a. தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் — 1. நேரசைச்சீர்
b. தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் — 2. ஆசிரிய உரிச்சீர்
c. தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி — 3. வெண்பா உரிச்சீர்
d. நாள் — 4. வஞ்சி உரிச்சீர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 3 | 2 | 1 | 4 |
| D) | 1 | 4 | 2 | 3 |

54. "மாரியன்ன வண்கைத் தேர்வேள் ஆய்" எனப்படுவது எவ்வகை உவமை?

A) தொழில் உவமை B) பயன் உவமை
C) பண்பு உவமை D) தொகைஉவமை

55. கீழ் வருவனவற்றுள் உண்மை உவமைக்கு எடுத்துக்காட்டு எது?

A) மறுப்பயின்ற வாண்மதியும் அம்மதிக்குத் தோற்கும் நிறத்தலரும் நேர்ஒக்கும் முகம்
B) தாதுஅளவி வண்டு தடுமாறும் தாமரைகொல் முகம்
C) வேலும் கருவிளையும் மென்மானும் செஞ்சரமும் போலும் கண்
D) காமருவண்டு அல்ல கருநெடுங்கண்

56. உருவக அணி எத்தனை வகைப்படும்?

A) 12 B) 15 C) 20 D) 22

57. "மனைக்கு விளக்காம் மடவார், மடவார் தமக்குத் தகைசால் புதல்வர்
மனைக்கினிய காதல் புதல்வர்க்கு கல்வியே, கல்விக்கு ஓதில் புகழ்சால் உணர்வே"
இது எவ்வகைத் தீவக அணி?

A) விருத்தத்தீவகம் B) சிலேடைத் தீவகம்
C) மாலாத் தீவகம் D) உவமைத் தீவகம்

58. "செங்கமல நாட்டம், செழுந்தாமரை வதனம்,
பங்கயம் செவ்வாய், பதுமம் போல் செங்கரங்கள்" இது எவ்வகை பின்வருநிலை அணி?

A) பொருள் பின்வருநிலை B) சொல் பின்வருநிலை
C) சொல் பொருள் பின்வருநிலை D) உவமைப் பொருள் பின்வருநிலை

59. ஆராய்ந்தெழுதுக

1. மொழி என்பது வாயால் சொல்லப்படும் ஒலிகளின் வெளிப்பாட்டைக் குறிக்கும்
2. மொழி என்பது கருத்தினைப் பரிமாறிக்கொள்ளப் பயன்படும் ஒரு கருவியாகும்
3. மொழி இல்லையேல் பண்பாடுகள் இல்லை
4. உலகிலுள்ள எல்லா மொழிகளும் பண்பட்ட மொழிகளே

A) 1,2,3 சரி B) 1,2,4 சரி C) 2,3,4 சரி D) அனைத்தும் சரி

60. கீழ்வரும் மொழிகளுள் திராவிடமொழி அல்லாதது எது?

A) தெலுங்கு B) பாலி C) தோடா D) குடகு

61. ஒன்று என்னும் எண் 'ஒந்து' என வழங்குவது எந்த திராவிட மொழியில்?

A) கன்னடம் B) மலையாளம் C) தெலுங்கு D) தமிழ்

62. கீழ்வரும் ஒலி உறுப்புக்களில் அசையும் உறுப்பு எது?

A) மேல் உதடு B) கீழ் உதடு C) அண்ணாக்கு D) பல்

63. ஆராய்ந்தெழுதுக

1. தொல்காப்பியர் எழுத்து என்று கூறுவதை மொழியியலார் ஒலியன் என்பர்
2. ஒலியன் என்பது பொருள் தருகின்ற ஒரு சிறிய ஒலிக்கூறாகும்
3. ஒரு மொழிக்கு அடிப்படையான மிகச் சிறிய ஒலிக்கூற்றினை ஒலியன் எனலாம்
4. ஒலியின் பல்வேறு இயல்புகளை விளக்குவது ஒலியனியல் எனப்படும்

A) 1,2 சரி B) 1,2,3 சரி C) 1,3,4 சரி D) 2,3,4 சரி

64. ஒரு மொழியில் மேலும் பிரிக்கமுடியாத பொருளுள்ள வடிவம் எது?

A) முன்னொட்டு B) மாற்றொலி
C) உருபன் D) பின்னொட்டு

65. தனித்து நின்று செயல்படாமல் யாதேனும் ஓர் உருபனுடன் சேர்ந்து நின்று
பொருளைத் தருவதை எவ்வாறு குறிப்பிடுவர்?

A) கட்டிலா உருபன் B) சேராநிலை உருபன்
C) பதிலீடு உருபன் D) கட்டுறு உருபன்

66. பொருத்துக

| | | |
|---|---|---|
| a. | பேரகராதி | 1. கதிரைவேற்பிள்ளை |
| b. | தமிழ்ச்சொல் அகராதி | 2. கந்தையாப் பிள்ளை |
| c. | செந்தமிழ் அகராதி | 3. சிங்காரவேலு முதலியார் |
| d. | அபிதான சிந்தாமணி | 4. காஞ்சிபுரம் இராமசாமி நாயுடு |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 3 |
| B) | 3 | 2 | 1 | 4 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 1 | 3 | 2 | 4 |

67. நாமதீப நிகண்டுவின் ஆசிரியர் யார்?

A) சிவசுப்பிரமணிய கவிராயர் B) மண்டலபுருடர்
C) காங்கேயர் D) திவாகரர்

68. ஆராய்ந்தெழுதுக

1. கடந்தகால நிகழ்வுகளை ஆராய்ந்து அவற்றைப் பொதுமைப்படுத்துவதே வரலாற்றுமுறை ஆய்வு
2. வரலாற்றுமுறை ஆய்வில் கருதுகோளுக்கு இடமில்லை
3. வரலாற்றுமுறை ஆய்வு என்பது வரலாற்றை ஆய்வு செய்வதாகும்
4. வரலாற்று முறை ஆய்வு என்பது ஒரு விதிகாண் முறையாகும்

A) 1,4 சரி B) 2,3 சரி C) 1,3,4 சரி D) 1,2,4 சரி

69. ஆய்வு நோக்கை எடுத்துரைக்கும் முன்னுரையை இலக்கணநூல் எவ்வாறு குறிப்பிடுகின்றது?

A) அணிந்துரை B) கருத்தாடல்
C) நுதலிப்புகுதல் D) முன்னுரைத்தல்

70. ஆய்வைத் தொடர்ந்து செலுத்துவதற்கு அடிப்படையாக அமைவது எது?

A) தரவுகள் B) கருதுகோள்
C) மேற்கோள்கள் D) ஆவணங்கள்

71. ஆராய்ந்தெழுதுக

1. இலக்கியத்தைப் பிற நுண்கலைகளுடன் ஒப்பிடுவதும் ஒப்பிலக்கியமே
2. ஒப்பிடுவதன் நோக்கம் ஒன்றின் உயர்வையும் இன்னொன்றின் தாழ்வையும் சுட்டிக் காட்டுவதாகும்
3. தமிழில் ஒப்பிலக்கியத்திற்கு வித்திட்டவர் வ. வே. சு. ஐயர்
4. ஒப்பியல் ஆய்வுக்கென தனிக் கோட்பாடுகள் இல்லை.

A) 1,3 சரி B) 2,4 சரி C) 2,3 சரி D) 1,3,4 சரி

72. பொருத்துக

| | | |
|---|---|---|
| a. | ஒப்பியல் நோக்கில் சங்ககாலம் | 1. பாலா |
| b. | விடுதலைச் சிட்டும் புரட்சிக் குயிலும் | 2. எஸ்.இராமகிருஷ்ணன் |
| c. | பாரதியும் கீட்சும் | 3. க. செல்லப்பன் |
| d. | கம்பனும் மில்டனும் | 4. கதிர் மகாதேவன் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 2 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 1 | 3 | 4 | 2 |

73. ஒப்பிலக்கியக் கோட்பாடுகளில் உட்படாதது எது?

A) வகைமைக் கோட்பாடு B) தாக்கக் கோட்பாடு
C) ஆன்மீகக் கோட்பாடு D) மையக்கருத்துக் கோட்பாடு

74. கீழ் வருவனவற்றுள் க. கைலாசபதி அவர்களின் நூல் எது?

A) Tamil Heroic Poems B) Heroic age of India
C) India Heroism in Sangam Poetry D) Tamil Heroic Poetry

75. கீழ்வரும் நாவல்களில் தலித்திய நாவலாகக் கருதப்படுவது எது?

A) மரப்பசு B) சங்கதி
C) பொய்த்தேவு D) கவலை

76. பொருத்துக

| | | |
|---|---|---|
| a. | குட்டிரேவதி | 1. சங்கராபரணி |
| b. | கனிமொழி | 2. கொடுக்கு |
| c. | தமிழச்சி தங்கபாண்டியன் | 3. கருவரை வாசனை |
| d. | மாலதி மைத்ரி | 4. மஞ்சணத்தி |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 1 | 2 | 4 | 3 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 2 | 3 | 4 | 1 |

77. கீழ்வரும் எழுத்தாளர்களில் பின்நவீனத்துவ எழுத்தாளராக அறியப்படுபவர் யார்?

A) எம்.ஜி.சுரேஷ் B) சு, சமுத்திரம்
C) சுஜாதா D) ஆ. மாதவன்

78. விழி. ப. இதயவேந்தன் அவர்களின் நூல் அல்லாதது எது?

A) மலரினும் மெல்லிது B) புதைந்து எழும் சுவடுகள்

C) நந்தனார் தெரு D) அவரவர் அந்தரங்கம்

79. ஆராய்ந்தெழுதுக

1. மொழிபெயர்ப்பு மனித இனத்திற்கு இன்றியமையாதது
2. ஒரு மொழியில் பிறமொழி நூல்களை மொழிபெயர்த்துக் கொண்டுவருவதால் அம்மொழி வளம் பெறும்
3. மூலமொழியை நிலைமொழி என்றும், பெயர்ப்பு மொழியை வருமொழி எனவும் குறிப்பிடுவர்
4. மொழிபெயர்ப்புப் பணி சிறப்பாக அமைய அகராதிகளைப் பயன்படுத்தக்கூடாது

A) 1,2 சரி B) 2,3 சரி C) 1,2,3 சரி D) அனைத்தும் சரி

80. பொருத்துக

a. மனோன்மணீயம் 1. Tempest
b. இரட்சண்ய யாத்ரிகம் 2. Light of Asia
c. ஆசியஜோதி 3. Pilgrims Progress
d. புயல் 4. The Secret Way

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 1 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 1 | 3 | 4 | 2 |

81. மணநூல் என்று அறியப்படும் நூல் எது?

A) சீவகசிந்தாமணி B) மணிமேகலை
C) நளவெண்பா D) குண்டலகேசி

82. ஆராய்ந்தெழுதுக

1. தமிழில் தோன்றிய முதல் நாவல் பிரதாபமுதலியார் சரித்திரம்.
2. இந்நாவலை எழுதியவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை
3. இந்நாவலின் முதல் பதிப்பு 1910 ல் வெளியானது
4. இந்நாவலில் அறக்கருத்துக்களும் நீதிபோதனைகளும் மிகுதியாக உள்ளன

A) 2,3 சரி B) 1,4 சரி C) 1,2,4 சரி D) 2,3,4 சரி

83. கீழ்வரும் எழுத்தாளர்களில் சாகித்ய அக்காதமி விருது பெற்ற எழுத்தாளர்

A) ஜெயமோகன் B) சுந்தரராமசாமி
C) சிவசங்கரி D) சு. வெங்கடேசன்

84. 'பூனையைப்போல் அலையும் வெளிச்சம்' என்னும் கவிதைத்தொகுப்பின் ஆசிரியர்

A) மாலதி மைத்ரி B) குட்டிரேவதி
C) கிருஷாங்கினி D) வைகைச்செல்வி

85. பொருத்துக

| | | |
|---|---|---|
| a. | திருமந்திரம் | 1. இராமலிங்க அடிகளார் |
| b. | திருப்புகழ் | 2. மாணிக்கவாசகர் |
| c. | திருவருட்பா | 3. அருணகிரிநாதர் |
| d. | திருவாசகம் | 4. திருமூலர் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 2 | 1 | 3 |
| B) | 4 | 3 | 1 | 2 |
| C) | 2 | 4 | 3 | 1 |
| D) | 3 | 1 | 2 | 4 |

86. ஆராய்ந்தெழுதுக

1. மலையாள முப்பெரும் கவிஞர்களில் ஒருவர் உள்ளூர் எஸ். பரமேஸ்வர ஐயர்
2. இவர் ஞானபீடம் பரிசு பெற்றவர்
3. இவரது முக்கியமான ஒரு கவிதை நூல் உமாகேரளம்
4. உள்ளூர் மலையாள இலக்கிய வரலாற்றை மிக விரிவாக எழுதியுள்ளார்

A) 1,2,3 சரி B) 2,3,4 சரி C) 1,2,4 சரி D) 1,3,4 சரி

87. சியாம மாதவம் என்ற கவிதை நூலுக்கு சாகித்ய அக்காதமி பரிசு பெற்றவர்

A) பிரபா வர்மா B) குமாரனாசான்
C) ஆற்றூர் ரவிவர்மா D) சுகதகுமாரி

88. கீழ் வருவனவற்றுள் தகழி சிவசங்கரப்பிள்ளையின் நூல் அல்லாதது எது?

A) செம்மீன் B) இரண்டிடங்ஙழி
C) இரண்டாமூழம் D) தோட்டியுடெ மகன்

89. பேப்பூர் சுல்தான் என அறியப்படும் மலையாள எழுத்தாளர்

A) எஸ். கே. பொற்றக்காடு B) வைக்கம் முகம்மது பஷீர்
C) புனத்தில் குஞ்ஞப்துல்லா D) முகுந்தன்

90. 'பூமிக்கொரு சரமகீதம்' பாடியவர்

A) சுகதகுமாரி B) ஐயப்பப்பணிக்கர்
C) ஓ. என். வி. குறுப்பு D) மாதவிக்குட்டி

91. ஆராய்ந்தெழுதுக

1. தெக்கணத்தின் வடபகுதியை ஆண்டவர்கள் சாளுக்கியர்கள்
2. சாளுக்கியர்களின் தலைநகராக விளங்கியது வாதாபி
3. சாளுக்கிய அரசவம்சத்தில் குறிப்பிடத்தக்கவன் புலிகேசி
4. கீர்த்திவர்மனின் தோல்விக்குப்பின் சாளுக்கிய அரசு சிதைந்தது

A) 1,2 சரி B) 1,2,3 சரி C) 2,3,4 சரி D) அனைத்தும் சரி

92. பொருத்துக

| | | |
|---|---|---|
| a. | உதியன் | 1. பல்லவன் |
| b. | செழியன் | 2. சேரன் |
| c. | வளவன் | 3. பாண்டியன் |
| d. | வர்மன் | 4. சோழன் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 2 | 4 | 1 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 2 | 3 | 4 | 1 |
| D) | 1 | 4 | 2 | 3 |

93. பிற்காலச் சோழர்களின் எழுச்சிக்கு வித்திட்டவன்

A) விஜயாலய சோழன் B) ஆதித்த சோழன்
C) இராஜராஜ சோழன் D) பராந்தக சோழன்

94. நாயக்கர் வரலாற்றில் கதிரவன் என விளங்கியவன்

A) முத்துவீரப்ப நாயக்கர் B) விசுவநாத நாயக்கர்
C) சொக்கநாத நாயக்கர் D) திருமலை நாயக்கர்

95. வேலூர்க் கலகம் நடைபெற்ற ஆண்டு

A) 1857 B) 1806 C) 1768 D) 1912

96. பன்மொழிச் சுவடிகளின் தொன்மையான நூலகம் எது?

A) தஞ்சை சரஸ்வதி மகால்
B) மதுரை நாயக்கர் மகால்
C) தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம்
D) கன்னிமாரா நூலகம்

97. மன்னர்கள் ஓலையில் எழுதும் கடிதங்களை மலையாளத்தில் 'நீட்டு' என்பர். தமிழில் இது எவ்வாறு அறியப்பட்டது?

A) மங்கலவாசகம் B) திருமுகம்
C) கிரந்தம் D) ஓலைநாயகம்

98. ஆராய்ந்தெழுதுக

1. தமிழும் வடமொழியும் கலந்து எழுதப்படும் மொழிநடையே மணிப்பிரவாளம்
2. மணி, வடமொழியையும் பவளம், தமிழையும் குறிக்கின்றது
3. மணிப்பிரவாள மொழிநடை தமிழகத்தில் மிகுந்த செல்வாக்குடன் விளங்கியது
4. பெரியவாச்சான் பிள்ளையின் திவ்வியப் பிரபந்த உரை மணிப்பிரவாள நடையில் அமைந்தது

A) 1,2 சரி B) 2,3 சரி C) 1,4 சரி D) 3,4 சரி

99. தமிழ்மொழி வரலாறு என்னும் நூலின் ஆசிரியர்

A) சு. சக்திவேல் B) வி.ஐ. சுப்பிரமணியம்

C) வி. டி. செல்வம் D) ஆறுமுக நாவலர்

100. தமிழின் முதல் அச்சுப்புத்தகம் எது?

A) தம்பிரான் வணக்கம் B) தேம்பாவணி
C) திருக்குறள் D) முகுந்தமாலை

101. பொருத்துக

a. கணினி 1. ஜான்பேயர்டு
b. தொலைக்காட்சி 2. சார்ல்ஸ் பாபேஜ்
c. முகநூல் 3. லாரி பேஜ்
d. கூகிள் 4. மார்க் சகர்பெர்க்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 1 | 3 | 4 | 2 |

102. தனித்து நிற்பது எது?

A) பேஸ்புக் B) டுவிட்டர் C) இ-மெயில் D) வாட்ஸ் அப்

103. பொருத்துக

a. வலைப்பூக்கள் 1. e magazine
b. எழுத்துரு 2. Internet
c. மின்னிதழ் 3. Font
d. இணையம் 4. Blogs

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 3 | 2 | 1 | 4 |
| C) | 1 | 4 | 3 | 2 |
| D) | 4 | 3 | 1 | 2 |

104. Download என்பதன் தமிழாக்கம் என்ன?

A) மின்னேற்றம் B) பதிவிறக்கம்
C) பதிவேற்றம் D) மின்னிறக்கம்

105. பொருத்துக

a. பொன்முடி 1. கடற்கரை
b. ஊட்டி 2. அணைக்கட்டு
c. கோவளம் 3. பூங்கா
d. மலம்புழை 4. மலையுச்சி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 2 | 3 | 4 | 1 |

C) 4 3 1 2
D) 3 4 1 2

106. ஊட்டி தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தில் உள்ளது?

A) நீலகிரி B) கோவை C) சேலம் D) மதுரை

107. கேரளத்தில் குமரகம் சுற்றுலாமையத்தின் சிறப்பு

A) மலையேற்றம் B) யானை சவாரி
C) வனவிலங்கு சரணாலயம் D) படகுப்பயணம்

108. கீழ் வருவனவற்றுள் பொன்மொழி எது?

A) தாயைப் போலப் பிள்ளை நூலைப்போலச் சேலை
B) தாயில் சிறந்த கோயில் இல்லை
C) ஒருபானை சோற்றுக்கு ஒருசோறு பதம்
D) கழுதைக்குத் தெரியாது கற்பூர வாசனை

109. முத்துப்பட்டன் கதை எவ்வகைக் கதைப்பாடல்?

A) வரலாற்றுக் கதைப்பாடல் B) புராணக் கதைப்பாடல்
C) சமூகக் கதைப்பாடல் D) தெய்வீகக் கதைப்பாடல்

110. நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டியவர்?

A) சு. சக்திவேல் B) நா. வானமாமலை
C) செ.வை. சண்முகம் D) ராஜம் கிருஷ்ணன்

111. தெருக்கூத்துக் கலையில் சிறந்து விளங்கியவர்

A) புஷ்பவனம் குப்புசாமி B) அவ்வை சண்முகம்
C) கண்ணப்ப தம்பிரான் D) பொன்னுசாமி

112. கீழ்வரும் பழமொழிகளில் மகாபாரதக் கதையுடன் தொடர்புடையது எது?

A) ஊர்வசி சாபம் உபகாரம் ஆனது
B) கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம்
C) அணில் குஞ்சும் தன்னால் ஆனது
D) அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்

113. ஆராய்ந்தெழுதுக

1. நாட்டுப்புற இலக்கியங்கள் வேறு, நாட்டார் வழக்காறுகள் வேறு.
2. நாட்டுப்புறப் பாடல்களை அதிகமாக எழுதியவர்கள் பெண்களே
3. நாட்டுப்புறப் பாடல்களுக்கு இலக்கணக் கட்டுப்பாடுகள் இல்லை
4. பேராசிரியர் லூர்து அவர்கள் நாட்டுப்புற இலக்கிய ஆய்வில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

A) 1,2 சரி B) 2,3 சரி C) 1,4 சரி D) 3,4 சரி

114. கீழ்வரும் சைவசமய நூல்களின் சரியான காலவரிசை எது?

A) பெரியபுராணம், திருவெம்பாவை, திருவிளையாடற்புராணம் ,சிவப்பிரகாசம்

B) சிவப்பிரகாசம், திருவிளையாடற்புராணம். திருவெம்பாவை, பெரியபுராணம்

C) திருவெம்பாவை, பெரியபுராணம், சிவப்பிரகாசம், திருவிளையாடற்புராணம்

D) திருவிளையாடற்புராணம், சிவப்பிரகாசம், பெரியபுராணம், திருவெம்பாவை

115. மானிடவியல் கோட்பாடுகள் என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) சந்தானபாரதி B) பாலபாரதி

C) பக்தவத்சலபாரதி D) சிவராமபாரதி

116. ஆராய்ந்தெழுதுக

1. வேதங்கள் இந்து மதத்தின் அடிப்படை நூல்கள்
2. வேதம் என்பது தமிழில் மறை என வழங்கப்படுகின்றது
3. வேதங்கள் நான்கு
4. வேதங்களில் காலத்தால் முற்பட்டது ரிக் வேதம்

A) 1,2,3 சரி B) 2,3,4 சரி C) 1,3,4 சரி D) அனைத்தும் சரி

117. உபநிடதம் கீழ்வருவனவற்றுள் எதனுடன் தொடர்புடையது?

A) ஞானகாண்டம் B) கர்மகாண்டம்

C) உபாசனகாண்டம் D) தர்மகாண்டம்

118. கீழ்வருவோரில் உபநிடதத்திற்கு உரை எழுதியவர் யார்?

A) நீலகண்ட சிவாச்சரியார் B) பெரியவாச்சான்பிள்ளை

C) சீனி வேங்கடசாமி D) காளிங்கர்

119. சைவசித்தாந்த சாத்திர நூல்களில் தலைமை நூலாகக் கருதப்படுவது எது?

A) திருமந்திரம் B) சிவஞானபோதம்

C) சிவப்பிரகாசம் D) உண்மைவிளக்கம்

120. மனிதனின் சமூக நடத்தைகள் குறித்த ஆய்வியல் எது?

A) உடல்சார் மானிடவியல் B) பண்பாட்டு மானிடவியல்

C) தொல்பொருளியல் D) மொழிசார் மானிடவியல்

--------------------